Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar<br>Miscellaneous<br>Sessions | : Case No.S.C. 47/2019 |
| Deposition of Witness for | : Prosecution அ.சா. 7<br>Defense<br>Court |
| Name | : சோமசுந்தரம் |
| Father's Name | : பெரியசாமி |
| Village | : வைகைநல்லூர்(வடக்கு கிராமம்) |
| Taluk | : குளித்தலை |
| Caste | : முத்துராஜா |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 49/2019 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2019.

மு.வி.

நான் கீழகுட்டப்பட்டியில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் 2 வது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மதியம் நேரத்தில் ஆய்வாளர் கோட்டைமேடு பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வந்து வரைபடம் வரைந்தார். அதில் என்னை ஒரு கையெழுத்து போடுமாறு கேட்டார். மற்றொருவரும் போட்டார் அவர் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி

காவல்நிலையத்தில் தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எழுதப்படாத தாளில் தான்

கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை யார் என்று தெரியாது என்றால் சரிதான். வரைபடம் வரையும்போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அரசுக்கு எதிராக மதுபானம் விற்பனை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் மீது வழக்கு எதுவும் இல்லை. நான் சட்டத்திற்கு எதிராக செயலை செய்து வருவதால் போலீசாருக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/சோமசுந்தரம்,
ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar | |
| Miscellaneous | : Case No.S.C. 47/2019 |
| Sessions | |
| Deposition of Witness for | : Prosecution அ.சா. 8 |
| | Defense |
| | Court |
| Name | : கோவிந்தராஜ் |
| Father's Name | : கருப்பண்ணன் |
| Village | : வைகைநல்லூர் (வடக்கு) |
| Taluk | : குளித்தலை |
| Caste | : ஒட்டன் |
| Calling | : கிராம உதவியாளர் |
| Religion | : இந்து |
| Age | : 43/2019 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2019.

மு.வி.

நான் குளித்தலை அண்ணா நகரில் வசிக்கிறேன். கிராம உதவியாளராக வேலை பார்க்கிறேன். தற்சமயம் தண்ணீர் பள்ளி கிராம உதவியாளராக பணிபுரிகிறேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். முதலாவது சாட்சியாக உள்ளது என்னுடைய கிராம நிர்வாக அலுவலரின் கையெழுத்து தான். கடந்த 07.04.2017 ம் தேதின்று என் வீட்டில் இருந்தபோது ஆய்வாளர் குருநாதன் என்னை போன்மூலம் காவல்நிலையத்திற்கு வரவழைத்தார். காவல்நிலையத்தில் ஆஜர் எதிரி கிருஷ்ணமூர்த்தியை விசாரித்தார்கள். அப்பொழுது என்னுடன் கிராம நிர்வாக அலுவலர் குணசேகரன் என்னுடன் வந்து இருந்தார். கிருஷ்ணமூர்த்தி சொல்ல சொல்ல டைப் செய்தார்கள். கிருஷ்ணமூர்த்தி 2 பேருக்கு தகராறு ஆகி நான் தான் ராஜாமுகமதுவை வெட்டியதாக கூறினார். குடும்ப தகராறால் வெட்டியதாக கூறினார். பஞ்சாயத்து ஆபிசில் வைத்து வெட்டியதாக கூறினார். 25.03.2017 ம் தேதி வெட்டியதாக

கூறினார். வேறு எதுவும் அவர் சொல்லவில்லை. வெட்டியதற்கான அரிவாளை புதுப்பாளையம் யேசுநாதர் கோவிலுக்கு அருகே உள்ள பாலத்திற்கு அடையில் வைத்திருப்பதாக சொன்னார். கிருஷ்ணமூர்த்தியை அழைத்துச்சென்று அரிவாளை எங்கள் முன்னிலையில் எடுத்தார்கள். அரிவாளை எடுக்கும்போது காலை 08.20, 08.30 மணி இருக்கும். தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1 அரிவாளால் தான் எடுத்து ஆஜர்படுத்தினார். மேற்படி அரிவாளை எடுத்ததற்கு அந்த இடத்திலேயே வைத்து நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4.

கு.வி.

எதிரியை அன்றையதினம் தான் முதன் முதலில் பார்த்தேன். அதற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். எதிரி அன்று கயிலி அணிந்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி பனியன் போட்டு இருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அரிவாளை எடுக்கும்போது நாங்கள் அனைவரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். அந்த வாகனத்தின் வண்டி எண் தெரியாது. நாங்கள் ஆம்னி வேனில் சென்றோம் என்றால் ஜீப்பில் சென்றோம். சா.,பொ.1 அரிவாளில் இரத்தக்கரை லேசாக இருந்ததை பார்த்தேன். அரிவாளை எடுக்கும்போது பிளாஸ்டிக் கவர் போட்டு மூடி வைத்திருந்து எடுத்தார்கள் என்றால் சரிதான். அரிவாளை ஆய்வாளர் தான் எடுத்தார் என்றால் சரிதான். எதிரி காட்டினார் ஆய்வாளர் அரிவாளை எடுத்தார். நான் அரசு ஊழியர் என்றும் அரசுக்கு எதிராக சாட்சியமளித்தால் பிரச்சினை வரும் என்று போலீசுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு கோப்பை இன்று தான் முதன் முதலாக படித்தேன் என்றால் சரிதான். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க மறுத்தார் என்றும் போலீசாரே டைப் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல, எதிரியிடம் வெற்றுத்தாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. டைப் செய்ததில் தான் கையெழுத்து வாங்கினார்கள்.

ஒம்/கோவிந்தராஜ்,
ஒம்/C.ஸ்ரீதர்,
உதவி அமர்வு நீதிபதி,
குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI

Calendar
Miscellaneous : Case No.S.C. 47/2019
Sessions

Deposition of Witness for : Prosecution அ.சா. 9
Defense
Court

| | |
|---|---|
| Name | :குணசேகரன் |
| Father's Name | :பெரியசாமி |
| Village | :வைகைநல்லூர் தெற்கு |
| Taluk | :குளித்தலை |
| Caste | :MBC இந்து வன்னியர் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | :இந்து |
| Age | :29/2019 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2019.

மு.வி.

நான் தற்பொழுது வைகைநல்லூர் தெற்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.8 வைகைநல்லூர் வடக்கு கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் முதலாவது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 07.04.2017ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு குளித்தலை காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் வாங்க உள்ளதாகவும், அதனால் சாட்சியாக இருக்கும்படி என்னையும், கிராம நிர்வாக உதவியாளரையும் வருமாறு கூறினார். கிருஷ்ணமூர்த்தி என்ற ஆஜர் எதிரி ஆய்வாளர் முன்பு இருந்தார். அவர் தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க போவதாக கூறினார்கள். அப்பொழுது காவல் ஆய்வாளர் முன்பு எதிரி நடந்த விவரங்களை கூறினார். நான் உடன் இருந்தேன். அப்பொழுது எதிரி அரிவாளை குளித்தலை மணப்பாறை ரோட்டில் கோட்டமேடு பெந்தகோஸ்த் சபைக்கு பின்புறம் உள்ள பாலத்திற்கு அடியில் வைத்திருப்பதாகவும், நேரில் வந்தால் எடுத்து

ஆஜர்படுத்துவதாகவும் சொன்னார். அதை குளித்தலை காவல் ஆய்வாளர் முன்பு கைப்பற்றி மகசர் தயார் செய்தார்கள். மகசரில் அரிவாள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட அரிவாள் சா.பொ.1 தான். எதிரியின் மனைவி பஞ்சாயத்து செயலாளருடன் வாழ்வதாக சொல்லி அந்த காரணத்தால் அரிவாளை பயன்படுத்தி வெட்டியதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

ஆஜர் எதிரியை தெரியும். எதிரி பேண்ட், சட்டை அணிந்திருந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி பணியன் அணிந்திருந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் நான் இருக்கும்போது ஆய்வாளரிடம் கொடுத்தார். அரிவாள் எனது முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும், நான் பாலத்திற்கு மேலே நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் தான் கைப்பற்றினார்கள். அங்கு ஆய்வாளர், நான், கிராம உதவியாளர், எதிரி, காவலர்கள் வந்து இருந்தார்கள் யார் என்று ஞாபகம் இல்லை. கிருஷ்ணமூர்த்தி என் கூட தான் இருந்தார். என்ன ஆடை அணிந்திருந்தார் என்று ஞாபகம் இல்லை. என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், ஞாபகம் இல்லை என்று சொல்வதற்கு காரணம் இன்று தான் எதிரியை பார்க்கிறேன் என்றால் சரியல்ல எதிரி என்னுடைய கிராமத்தில் தான் வசிக்கிறார். நான் அரசு ஊழியர் என்றும், அரசுக்கு எதிராக சாட்சியமளித்தால் பிரச்சினையாகிவிடும் என்று போலீஸ்க்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், உதவியாளரும் காவல்நிலையத்தில் கையொப்பம் இட்டோம் என்றும் அந்த இடத்தில் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு கோப்பை இன்றையதினம் தான் நான் படித்துவிட்டு நான் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/குணசேகரன்,

ஒம்/C.ஸ்ரீதர்,

உதவி அமர்வு நீதிபதி,

குளித்தலை.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI

Calendar
Miscellaneous : Case No.S.C. 47/2019
Sessions

Deposition of Witness for : Prosecution அ.சா. 10
Defense
Court

| | |
|---|---|
| Name | : கிருபா |
| Father's Name | :- |
| Village | :லாலாபேட்டை, பிள்ளாபாளையம் |
| Taluk | :கிருஷ்ணராயபுரம் |
| Caste | :MBC |
| Calling | :- |
| Religion | :இந்து |
| Age | :34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2019.

மு.வி.

நான் தற்பொழுது குளித்தலை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மு.நி.காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 2017ம் வருடத்தில் குளித்தலை காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியிலிருந்தபோது குளித்தலை காவல் நி.கு.எண்.226/2017 வழக்கில் ஆய்வாளர் கூற நான் முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் நான் தட்டச்சு செய்தேன். இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/கிருபா,

ஒம்/C.ஸ்ரீதர்,

உதவி அமர்வு நீதிபதி,

குளித்தலை.